1971 அக்டோபர் 23]

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்தக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின்கீழ் அதிகமாகத் தண்டனைக்கு ஆளாகியவர்கள் பால் உற்பத்தி செய்கின்ற ஏழை எளிய கிராம மக்களாக இருக்கிறார்கள். ஆனால், பாலில் தண்ணீரை விடாமல் சாப்பிடுவது கிடையாது. ஆகவே, அதற்காக அதிகமாகத் தண்டனை கொடுக்கக்கூடிய முறையை மாற்றி, பால் விற்கக்கூடியவர்கள் அதிகமாகத் தண்டனைக்காளாவதைத் தவிர்க்கும் வகையில் சட்டத்தில் மாற்றம் கொண்டுவர முடியுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒரு அளவு மட்டும் தண்ணீர் கலந்திருக்குமானால், அது எங்கே ஏற்பட்ட கோளாறு என்று தெரியாது; அவர்கள் பெரும்பாலும் தண்டிக்கப்படுவதில்லை. அளவுக்குமீறி தண்ணீர் கலக்கப்பட்டால் அப்பொழுது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப் படுகிறது. சட்டம் இல்லையென்றால் தண்ணீர்தான் இருக்குமே தவிர, பால் இருக்காது. (சிரிப்பு.)

கோயம்புத்தூர் மாவட்ட தலைமை மருத்துவமனை

* 34. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்ட மருத்துவமனையில் சிறுநீர், ரத்தம், அறுவை செய்து எடுக்கப்படுகின்ற கட்டிகள், முதலியவற்றிற்கு உடனுக்கு உடன் பரிசோதனை செய்யப்படும் கருவிகள் இல்லை என்ற பற்றாக்குறையைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இத்தகைய சோதனைகளுக்குத் தேவைப்படும் வசதிகளும், சாதனங்களும், கோவை மாவட்ட மருத்துவ மனையில் உள்ளன.

திரு. சு. துரைசாமி : இந்த வினா 1968-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் கேட்டிருந்தேன். அப்போது இந்தக் குறைபாடுகள் அந்த மருத்துவ மனையில் இருந்தன. இப்படிப்பட்ட குறைபாடுகள் கூடுமான வரையில் மருத்துவ மனைகளில் வராமல் இருப்பதற்காக முன்கூட்டியே நடவடிக்கைகள் எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : குறைபாடுகள் வாராதிருக்க நடவடிக்கைகள் எடுப்பது என்பது அரசின் பொதுக் கொள்கையாக இருந்தாலும் குறைபாடு வருகிறபோதுதான் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கிற அவசரம் ஏற்படுகிறது. 68-ல் உள்ள குறைபாட்டிற்கு, அதற்குப் பின்னர் அங்குள்ள மருத்துவக் கல்லூரியோடு தொடர்புடைய மருத்துவ மனையாக ஆக்கியிருப்பதால் இந்தக் குறைபாடுகளுக்கு இடமில்லாத வகையில் எல்லாவித பரிசோதனைகளுக்கும் இன்று வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன. கருவிகளும் இருக்கின்றன.

திரு. கே. என். குமாரசாமி : போதுமான கருவிகள் இல்லை என்பது இல்லை. தேவையான மருந்துகள் இல்லாமல் வெளியே தனியார் கடைகளில் வாங்கிக் கொடுக்கவேண்டிய ஒரு நிலை அந்த ஆஸ்பத்திரியில் இருக்கிறது என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது அந்த ஆஸ்பத்திரியில் மட்டுமல்ல. அது எல்லா மருத்துவமனைகளிலும் உள்ள நிலைமையாகும். ஏனெனில் ஒவ்வொரு ஆண்டும் தேவைப்படுகிற மருந்துகளை அவர்கள் பெறுகிற முறைப்படி அந்தந்த இடங்களிலிருந்து பெறவேண்டியிருக்கிறது. சில மருந்துகள் மூன்று மாத காலத்தில் அல்லது ஆறு மாத காலத்தில் முடிவடைகிறது. அதே மருந்துகளை திரும்பப் பெறவேண்டியிருக்கிறது. சில மருந்துகள் எப்போதாவது தேவைப்படுகிற மருந்துகள். எப்போதாவது தேவைப்படுகிற மருந்துகளை ஏராளமாக வாங்கி வைத்துக்கொள்வது என்பது பொது மக்களின் வரிப் பணத்தை வீணாக்குவதாகும். ஆகவே எப்போது தேவைப்படுகிறதோ அப்போது அவற்றை உடனடியாக வாங்கிக் கொள்கிற முறைதான் இன்று இருக்கிறது. அதற்குமேல் பொருளாதார வளம், எல்லாவற்றையும் எப் போதும் எங்கும் எவ்வளவும் வைப்பதற்கான வளம் அரசுக்கு இல்லை.

திரு. எம். தேவராசன் : குன்னூர் தலைமை மருத்துவமனையில் பல ஆண்டுகளாக எக்ஸ்ரே கருவி இல்லாத நிலையில் அந்த மருத்துவ மனையில் உடனடியாக ஒரு எக்ஸ்ரே கருவி அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கேள்வி தனிப்பட்ட கேள்வியாக இருந்தாலும், அங்கே எக்ஸ்ரே கருவி இருக்கிறது. அது நீண்ட நாட்களாக பழுதுபட்டிருக்கிறது.

* 35. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை தலைமை மருத்துவ மனையில் 1968 ஜூன் மாதத்தில் " Sagotin " " equipie " என்ற மருந்துகள் இல்லாமல் இருந்ததற்கான காரணங்கள் யாவை ?

(இ) இக்குறையைப் போக்க அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) மருத்துவமனை வார்டுகளிலிருந்து " சகோடின் " " எக்குப்பி " போன்ற மருந்துகள் கணிசமான அளவு தேவைப் படவில்லையாதலால், இந்த மருந்துகளை அதிக அளவில் இருப்பு வைத்துக் கொள்ளவில்லை. அம்மருந்துகள் உயிர் காப்பு மருந்துகளாகவும் கருதப்பட வில்லை. வினாவில் குறிப்பிடப்பட்ட கால அளவுக்கு முன்னரே இம்மருந்துகள் வாங்கப்பட்டு இருப்பில் வைக்கப் பட்டன. ஆனால் இருப்பில் உள்ள மருந்துகள் தீர்ந்த பின்னர், அவை மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக மீண்டும் வாங்கப்படவில்லை.

(இ) பின்னர், வார்டுகளிலிருந்து இம்மருந்துகளுக்கான தேவை ஏற்பட்ட போது அவை வாங்கப்பட்டு வார்டுகளுக்குக் கொடுக்கப்பட்டன.

திரு. சு. துரைசாமி : மருத்துவ மனைகளில் எவ்வளவு மருந்துகள் தேவை என்று முன்கூட்டியே ஒரு வருடத்திற்கு ஒரு முறை சொல்கிறார்கள். அப்படி தேவைப்படுகிற மருந்துகளை முன்கூட்டியே எவ்வளவு தேவை என்று பார்த்து அம்மருந்துகளை முன்கூட்டியே வாங்கி வைத்துக்கொள்ளக்கூடிய முயற்சியை மேற்கொண்டால் இப்படிப்பட்ட குறைபாடுகளைத் தவிர்க்க முடியும். ஆகவே, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?